Registered as a News-paper in Ceylon
F. M. G. NO. H. A. 59/300 of 1939.

உ
சிவமயம்

இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம் 28-ம் திகதி ஆரம்பமானது

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும் மூசு வண்டறை பொய்கையும் போன்றதே ஈசனெந்தை யிணையடி நீழலே

புத். ருரு] யாழ்ப்பாணம்:—சுபானு வரு ஆடிமீ ௨௦௨ (1943 ஆகஸ்ட்மீ 5 வியாழக்கிழமை) [இல. ௩௪

புங்குடுதீவுக் கொலை வழக்கு

புதிதாக விசாரிக்கப் படும்

ஜூரித் தலைவரின் சுகவீனத்தால் நேர்ந்த மாற்றம்

புங்குடுதீவுக் கொலை வழக்கில் ஜூரித் தலைவராக இருந்த திரு. K. பூரணம்பிள்ளை என்பவர் சுகவீன முற்றிருப்பதால், தாம் ஒருவாரத்துக்குக் கோட்டுக்கு வரமுடியாதென்று வைத்தியரிடமிருந்து பெற்ற நற்சாக்ஷிப் பத்திரமொன்றை அனுப்பியிருந்தார். நீதிபதி மிஸ்டர். ஜயதிலகா ஜூரர்களை விடுதலை செய்து மற்றொரு ஜூரியின் முன் இவ்வழக்குப் புதிதாக விசாரணை செய்யப்படவேண்டுமென்றுகூறி அவ்வழக்கைத் தவணையிட்டார். இம்மாதம் 16ந் திகதி தொடக்கம் யாழ்ப்பாணம் சுப்பிறீம் கோட்டில் ஜஸ்டிஸ் விஜயவர்த்தனாவே நீதியரசராகக் கடமை பார்ப்பரென்று தெரிகிறது.

இவ்வழக்கு மாத்திரமல்ல, இன்னும் பல வழக்குகள் இக்கோட்டில் விசாரணை செய்தற்காகச் சேர்க்கப்படுமென்று தெரிகிறது. இக்கோடு செப்டம்பர் நடுப்பகுதிவரை நடைபெறும் என்றும் கருதப்படுகிறது.

மந்திரி கோரும் ஸ்தல ஸ்தாபன ஆதரவு

சுகாதார மந்திரி ஸ்தலஸ்தாபன நிருவாகசபைக்கு ஓர் அறிக்கை சமர்ப்பிக்கையிற் கிராமாந்த சுகாதாரத் திட்டங்களை நிறைவேற்றும் விஷயத்தில் ஸ்தலஸ்தாபனங்களின் ஒத்துழைப்பைக் கோரியிருக்கிறார்.

ஸ்தலஸ்தாபனங்கள் குறிப்பாகக் கிராமச் சங்கங்கள் சுகாதார அதிகாரிகளின் சேவையை முற்றிலும் உபயோகிக்கவில்லையெனபதற்குப் போதிய சான்றுகளிருப்பதாகவும் அவர் கூறுகிறார்.

கிராமச் சங்கங்கள் சுகாதாரப் பிரச்னைகள் சம்பந்தமாக வைத்திய அதிகாரிகளுடன் கலந்து ஆலோசிக்கும்படி மாகாணத் தலைவர்களும் கேட்கப்பட்டிருக்கின்றனர்.

சீனத் தலைவர் லின்சென் மரணம்

சுங்கிங் ஆகஸ்ட் 2

சீனக் குடியரசுத் தலைவரான லின்சென் இன்று காலமானார்.

காலஞ்சென்ற லின்சென்னுக்கு ஏறக்குறைய 80 வயதாகும். சீனாவின் பழைய ராஜீயவாதிகளில் லின்சென் ஒருவராவர். சீனப் புரட்சியின் மூலகர்த்தாவான டாக்டர் சன்யாட் சன்னுடன் ஆரம்பமுதல் வேலை செய்து வந்திருக்கிறார். உள்நாட்டுச் சண்டை நடைபெற்ற சமயத்திலும் தன்னுடைய தலைவரிடம் பூரண விசுவாசத்துடன் நடந்து கொண்டிருக்கிறார்.

டாக்டர் சென்னின் மரணத்திற்குப் பிறகு இவர் சியாங்கை ஷேக்கின அரசாங்கத்தில் ஒரு அங்கத்தினராகச் சேர்ந்து சீனாவிலேயே மிகப்பெரிய பதவியை அடைந்தார்.

'சரணகதியடைந்தாவது சமாதானம் செய்துகொள்ள வேண்டும்'

இத்தாலிய செனட்சபை அங்கத்தினர் அபிப்பிராயம்

லண்டன் ஆக 3—

இத்தாலிய எல்லைப்புறத்துக்குள் இருக்கும் 'டெயிலி மெயில்' பத்திரிகையின் விசேஷ நிருபர் ராய்ட்டர் மூலம் அறிவிப்பதாவது:-

இத்தாலிய செனட் சபையின் பிரதான அங்கத்தவர்கள் நேற்று ரோமாபுரியிற்கூடி யுத்தம் கூடிய விரைவில் முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டுமென்று தாம் அபிப்பிராயப்படுவதாக மார்ஷல் படோகிளியோவுக்கு அறிவித்ததாகத் தீர்மானித்தனர். அவசியமாயின் சரணாகதியடைந்தாவது யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமென்றும் அவர் அபிப்பிராயப்பட்டனர்.

படோகிளியோவை வற்புறுத்திச் சமாதானம் செய்து கொள்ளும்படி தூண்டுவதற்கு ரோமாபுரிக்குச் செல்வதற்கான ஏற்பாடுகள் பல இடங்களில் நடைபெறுகின்றனவென்று இத்தாலியிலிருந்து கிடைத்த அறிக்கைகள் கூறுகின்றன.

இதற்கிடையில் ரூமன் கத்தோலிக்க வட்டாரங்கள் முற்றும் புதிதான ஒரு சமாதானத் திட்டம் பற்றிப் பிரஸ்தாபிக்கின்றன. இத்திட்டம் பற்றி ரோமாபுரியெங்கும் பேச்சாயிருக்கிறது. போப்பாண்டவரின் பாதுகாப்பின்கீழ் ஒருரூமன் இராச்சியத்தைச் சிருஷ்டிப்பதும் இத் திட்டத்தில் அடங்கியிருக்கிறது. இத்திட்டத்தின்படி போநதிப் பள்ளத்தாக்கை ஜெர்மானியர் வைத்திருப்பர். நேசதேசங்களுக்குத் தெற்கு இத்தாலி முழுவதும் கொடுக்கப்படும்.

நேசதேசங்கள் இத் திட்டத்தை ஒருபோதும் கவனத்துக்கு எடுத்துக் கொள்ளமாட்டாவென்று இத்தாலிக்கு வெளியிலுள்ள வட்டாரங்கள் தெரிந்து கொண்டிருக்கின்றன. இத்தாலிய பூபாகத்தின்மீது எந்த நிமிஷத்திலும் படையெடுக்கப்படுமென்று நேசதேசங்கள் இன்றிரவு விடுத்த எச்சரிக்கை ஊர்ஜிதம்செய்துவிட்டது. மத்திய இத்தாலி நேசதேசங்களுக்கு அவ்வளவு இராணுவ முக்கியத்துவம் வாய்ந்ததல்லவென்றும் பால்கன் நாடுகள்மீது நடவடிக்கை எடுத்துக் கொள்வதற்குத் தெற்கு இத்தாலி ஒரு சிறந்த தளமென்றும் இத்தாலியர் அபிப்பிராயப்படுகின்றனரென்று தெரிகிறது.

மலேயாவிற் கைதியான யுத்தக் கைதிகள்

மலேயாவிற் கைது செய்யப்பட்டுத் தாய்லந்திலும் மலேயாவிலுமுள்ள முகாம்களில் பந்தோபஸ்தில் வைக்கப்பட்டிருக்கும் யுத்தக் கைதிகளின் மற்றோர் நாமாவலி இப்பொழுது குடியேற்ற நாட்டு மந்திரியிடமிருந்து மேன்மை தங்கிய தேசாதிபதிக்குக் கிடைத்திருக்கிறது. இது விஷயமாக இலங்காக் காரியாலயத்திலுள்ள இப்புதிய நாமாவலியில் ஏறக்குறைய 200 பேர்களுள.

தேசாதிபதிக்குச் சாரண கௌரவச் சின்னம்

மன்னர்பிரானால் வழங்கப்பட்டது

சாரண இயக்கத்தில் ஒருவர் அடையக் கூடிய மிகச் சிறந்த பதக்கமான 'வெற்றி ஓநாய்'ப் பதக்கம் நேற்று முன்தினம் கொழும்புச் சாரணர் தலைமைக் காரியாலயத்தில் மேன்மை தங்கிய தேசாதிபதிக்கு வழங்கப்பட்டது. பிரதம சாரணக் கொம்மிஷனரான திரு. கே. சோமசுந்தரம் கௌரவப் பதக்கத்தைத் தேசாதிபதிக்கு வழங்கும்போது ஏகாதிபத்தியத்தின் பிரதம சாரணரால் அது அளிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்துச் சாரண விஷயங்களில தேசாதிபதி அளித்த உதவிகளுக்காகச் சாரணரின் சார்பாக நன்றி தெரிவித்தார்.

தேசாதிபதி நகரிலுள்ள நான்கு விமானத் தாக்குதற் பாதுகாப்புப் பிரிவினரின் அறைகளைப் பார்வையிட்டுத் திருப்தி தெரிவித்தார். பொதுஜனப் பாதுகாப்புக் கொம்மிஷனர் சாரணக் கொம்மிஷனர் முதலியோர் அவருடன் சென்றனர்.

தேசாதிபதி பிற்பகல் 6½ மணிக்குச் சாரண சங்கத் தலைவர் திரு. ஜி. ஸி. எஸ். கொரியாவால் வரவேற்கப்பட்டுப் பேசும்போது மன்னர்பிரான் மோல்டா மக்களின் தீரத்தைப் போற்றி ஜோர்ஜ் சிலுவையை வழங்கினாரென்றும், இப்பொழுது தமக்கு வழங்கப்பட்ட பதக்கம் இலங்கை மக்களின் திறமைக்காக வழங்கப்பட்டதென்றும் குறிப்பிட்டார்.

சிஸிலியில் நேசப்படை முன்னேற்ற வேகம்

லண்டன், ஆக, 3—

சிஸிலியில் கனேடியத் துருப்புகள் ரீகல்புடோவைக் கைப்பற்றினவென்று உத்தியோகமுறையில் அறிவிக்கப்படுகிறது. கட்டானியா சமவெளியின் மேற்குக் கோடியில் நேசப்படைகள் நுழைந்து விட்டன.

சிஸிலியில் எல்லாப்பகுதிகளிலும் சத்துரு எதிர்ப்பு அதிகரித்து வருகிறதென்று வடஆபிரிக்காவிலுள்ள நேசதேசத் தலைமைக் காரியாலய அறிக்கையொன்று கூறுகிறது. அது மேலும் கூறுவதாவது:- நமது துருப்புகள் கடுமையாகப் போரிட்டு பாதைகள் இல்லாத நாட்டின்வழியாக முன்னேறுகின்றன. கடற்கரைப்பகுதியில் பிரிட்டிஷ் எட்டாவது சேனையின் பீரங்கிகள் வெற்றியுடன் சத்துருவைத் தாக்கின. ராமாக்காவிலிருந்து முன்னேறிய நமது துருப்புகள் கட்டானியா சமவெளியின் மேற்குக் கோடியில புகுந்துவிட்டன.

பலெர்மோவில் மொண்ட்கொமெரி

அமெரிக்க, கனேடிய வீரர்களுக்குப் பாராட்டு

பலெர்மோ ஆகஸ்ட் 2—

ராய்ட்டரின் விசேஷநிருபர் எழுதுவதாவது:-

ஜெனரல் மொண்ட்கொமெரி அமெரிக்க பறக்கும் கோட்டையொன்றில வியாழக்கிழமையன்று பாலெர்மோ வந்து சேர்ந்தார். அவருடன்கூட அவருடைய பிரதம இராணுவ அதிகாரியும் மேற்குப் பாலைவன விமானப்படையின் தலைவரும் வந்தனர்.

கோடைக்காலத் தாக்குதலால் ஜெனரல் மொண்ட்கொமெரியின் தேகம் சிறிது கறுத்திருக்கிறது. ரூயல் அரண்மனையில் ஜெனரல் பாட்டனுடன் சாப்பிட்டுவிட்டு மாண்ட்கொமெரி யுத்த நிருபர்களுடன் பேசுகையில அமெரிக்கர்களையும் கனேடியர்களையும் தான் மிகவும் பாராட்டுவதாகவும் சிஸிலியில் நேசப்படைகளுக்கு அளித்துவரும் பெரும் உதவிக்காக நேசதேச விமானப்படையைப் பாராட்டுவதாகவும் கூறினர்.

ஜெர்மன் போர் வீரர்கள்

ஜெர்மன் போர்வீரர்களைப்பற்றிப் பேசுகையில் அவர் கூறியதாவது:-

அவர்கள் உற்சாகத்துடன் போரிடும் குருட்டு நம்பிக்கை கொண்ட நாஜிகளாகும். எனக்கு ஜெர்மனியரைப் பிடிக்காவிட்டாலும் அவர்கள் மிகவும் நன்றாகப் போரிடுகின்றனர். ஆபிரிக்காவில் போரிட்ட மாதிரியே ஜெர்மனிய சிஸிலியிலும் நன்றாகப் போரிடுகின்றனர்.

இத்தாலியில் படோகிளியோவின் நடவடிக்கைகள் நம்முடையதிட்டங்களைக் கொஞ்சமும் பாதிக்காது இத்தீவிலிருந்து ஜெர்மானியரை அடியோடு விரட்டி விடுவதே நம்முடைய வேலையாகும். இவ்வேலையை நாம் நிச்சயமாகச் செய்து முடித்துவிடுவோமென்று பூரணமாக நம்புகிறேன்.

ஜெனரல் ஈசன்ஹோவர் சமீபத்தில் சிஸிலிக்கு மீண்டும் ஒருமுறை விஜயஞ் செய்துவிட்டு நேசதேசத் தலைமைக்காரியாலயத்துக்குச் சென்றிருக்கிறாரென்று இப்பொழுது தெரிகிறது.

ஒன்பது பிரதான நகரங்கள் கைப்பற்றப்பட்டன

சிஸிலியில் வடகிழக்குக் கரையோரமாகவுள்ள 9 பிரதான நகரங்களை ஜெர்மானியரிடமிருந்து அமெரிக்கர் கைப்பற்றியிருக்கின்றனர். அந்நகரங்களில் ஒன்று சான்ஸ் டீ பீஸுவுக்கு இரண்டு மைல் தூரத்தில் இருக்கிறது.

சிஸிலியிலிருந்து நாஜியர் வெளியேறினர்

ஸிஸிலியிலிருந்து ஜெர்மன் துருப்புகளை வெளியேற்றுவதற்கு மார்ஷல் படோகிளியோ உதவிசெய்து வருகிறாரென்று ஸ்விஸ் எல்லைப்புறத்திலிருந்து வந்த செய்தியொன்று கூறுவதாக அல்ஜியர்ஸ் ரேடியோ நேற்றிரவு அறிவிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர ணுமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் சுபானுஷு
ஆடிமீ உ0உ வியாழக்கிழமை

கட்டுப் படுத்தல் வேண்டும்

அந்நிய நாட்டிலிருந்து சீவியத்திற்குத் தேவையான பொருள்கள் சில இங்கே வருதல் குறைந்துபோக,பலவாரா தொழிய இந் நாட்டிலுள்ள உணவுப் பொருள்களும் வாழ்க்கைக்கு இன்றியமையா வேனைய பொருள்களும் நாளொரு வண்ணம் விலையேறி வரலாயின. இந் நாட்டில் ஆக்கப்படும் பொருள்களுள் மேலதிகமானவை பெரும்பாலும் சோரவியாபாரத்தில் அகப்பட்டு விடுகின்றன; இச் சோர வியாபாரத்தை அதிகாரிகள் இயன்ற வரையில் தடுத்து வருகினறனரென்பது நிசம். ஆனலும் சோர வியாபாரம் குறைந்த பாடில்லை யெனலாம். இது இங்ஙனமாக, அந்த அந்த மாகாணத்தில் விளையும் உணவுக்குரிய பொருள்களை அந்த அந்த மாகாணத்திலிருந்து வேறுமாகாணங்களுக்கு அரசினரின் அநுமதி யிலலாமல எவரேனும அதிகமில்ல கொடுத்து வாங்கி அகற்ற வொட்டாது அரசினர் தீர்க்கமான கட்டுப்பாடு செய்தல் வேண்டும்.

இந்த வட மாகாணத்தில் நெல் அதிகமில்லாவிட்டாலும் சாமை தினை குரக்கன் முதலிய சிறு தானியங்களும், மிளகாய் வெங்காயம் முதலிய வெஞ்சனப் பொருள்களும் இங்குள்ளாரால் விளைவிக்கப்படுதலுண்டு; இப் பஞ்சகாலத்தில் மேலே சொல்லப்பட்ட பொருள்களை யெல்லாம் முன்னைக் காட்டிலும் அதிகமாகப் பயிரிட்டு வளர்த்துப் பயனடைகிறார்கள்; ஆனல், இப்படிப் பயிரிட்டு விருத்தி செய்யும் மக்களுக்கு இப் பொருள்களைத் தம் மாகாணத்தி லுள்ள மக்களுக்கே நீதியான விலைக்குப் பகிர்ந்து விற்க வேண்டுமென்ற எண்ணமே கிடையாது. இவர்கள் தாம் ஆக்கிய பொருள்களை, யாருக்கு அதிக இலாபத்தோடு இல்லையேல் அநியாய விலைக்கு விற்கலா மென்று சிந்தித்திருக்கும் நேரத்திலேயே, தரகர்மார் என்று சொல்லப்படும் கோடரிக் காம்புபோன்ற சிலர் மேற்சொல்லப்பட்ட விவசாயிகளிடம் போய்ப் புகுந்து, குறித்த பொருளின் பெறுமதியைக் காட்டிலும் பன்மடங்கு அதிகமான விலை கொடுத்து அந்தப் பொருளைக் கரவிலவாங்கிக் கொழுமபு முதலிய வேறு ஊர்களுகு ஏற்றி விட்டுத் தமக்குக் கிடைக்கும் தரகு கூலியையும் இங்குள்ள ஏழை மக்களுக்குச் செய்யுந் துரோகமாகிய பழியையும் ஏற்றுக் கொள்ளுவார்கள்.

இப்படியே இங்குள்ள வியாபாரிமார்களும் அந்நிய நாட்டில் ஏற்றுமதியாகிக் கொழும்பில் இறக்குமதியாகி அப்பட்டினத்திலிருந்து இங்கே மூந்தியே வந்து சேர்ந்த பொருள்கள், பின்னர்க் கொழும்பில் விலையேறி விற்கின்றன எனக் கண்டால், உடனே தம் கடைகளி லுள்ள அந்தப் பொருள்களை யெல்லாம் பழையபடி பெட்டிகளுள் இட்டு அடைத்துப் புகைரத பார்க்கமாகக் கொழும்பிற்கு அனுப்பி விட்டு இங்கே அப்பொருள் கிடையாதென்றுசொல்லிக் கையை விரிகின்றார்கள்; சுருக்கமாகச் சொல்லுகில் இலங்கையி லுள்ள ஒன்பது மாகாணங்களுள இந்த வடமாணத்திலுள்ள விவசாயிகளும் தரகர்மாரும் கடைக்காரருமே இப்படிச் செய்கின்றனரே யொழிய வேறு எந்த மாகாணத்தி லுள்ளவர்களும் இப் படித்தம் அயலவர்களுக்குச் சகோதரர்க்குத் துரோகஞ் செய்ய மாட்டார்க ளென்பது அறியத் தகும்.

இங்ஙன மெல்லா மிருத்தலினல் இங்குள்ள அதிகாரிகள் எவரும், இனியேனும், மேலே குறித்த விவசாயிகள் தரகர் மார் கடைக்காரர் இப்படியான அக்கிரமங்களைச் செய்ய வொட்டாது கட்டுப்பாடு செய்து அக் கட்டுப்பாடு திறம்பாமற் கருமம் நடக்கச் செய்ய வேண்டு மெனக் கேட்டுக் கொள்ளுகின்றேம்.

இவ்வருடமும் கண்டி பெரஹரா நடைபெறாது

ஆலய அதிகாரிகள் தீர்மானம்

கண்டி யூலை, 31

தேசாதிபதியின் கோரிக்கையின் பேரில் சென்ற வருடம் நடைபெறாத கண்டிப் பெரஹரா விழா இவ்வருடமும் நடைபெறமாட்டாது. தலதமாளிகை அதிகாரியான திரு. டி. பி. ரத்வத்தை நிசாவை இன்று இவ்வாறு தெரிவித்தார்.

தேவாலய அதிகாரிகள் இம்முறை இவ்விழாவை அதிவிமரிசையின்றி நடத்தத் தீர்மானித்திருப்பதாக மேன்மைதங்கிய தேசாதிபதிக்கு அறிவித்திருந்தனர். அதற்குத் தேசாதிபதி பதிலளிக்கையில், விழாவை நடத்த விரும்பினுற் சில நிபந்தனைகளை அனுஷ்டிக்கும்படி தெரிவித்தார், தேசாதிபதியின் கடிதத்தைப் பரிசீலனை செய்யும் பொருட்டு இன்று மிஸ்டர் ரத்வத்தை ஒரு மகாநாடு கூட்டினர். அப்பொழுது இவ்வருடம் விழாவை நடத்தக்கூடாதென்று தீர்மானிக்கப்பட்டது.

கூட்டம் முடிந்தபின் தலதா மாளிகை அதிகாரி மகாநாட்டின் தீர்மானத்தைப் பத்திரிகைகளுக்குத் தெரிவித்தார். இவ்வாறு தாம் தேசாதிபதிகுத் தெரிவிப்பதாகவும் கடிதப் போக்குவரத்துப்பற்றிய விவரங்களை (வெளியிட அநுமதி கோரப்போவதாகவும் மிஸ்டர் ரத்வத்தை நிசாவை கூறினர்.

உலகம்பலவிதக் கதை

(முற்றொடர்)

உபசாரமும் சந்மானமும்

தம்பதிகள் முருகேசபிள்ளையின் வீட்டையடைந்த மாத்திரத்தே, முருகேசபிள்ளை, சொக்கலிங்கம், காஞ்சனம் என்னும் மூவரும் முன்றிலில் தீபம் நிறைகுடம் முதலிய மங்கலப்பொருள்களை வைத்து அவர்களை உபசரித்தார்கள்; அயலட்டத்திலுள்ள ஆண்கள் சிலரும் பெண்கள் சிலரும் அச்சமயத்தில் அங்கே சமுகமாயிருந்தனர்; முருகேசபிள்ளையும் மகனும் மணமகளையும் குமாரசுவாமியையும் உபசரிக்க, காஞ்சனமாலை மணமகளையும் தன் தாயையும் உபசரிக்க, மகள் செய்வதைப் பார்த்துத் தாயும் மணமகளும் புன்னகை செய்தனர்; சிறிதுநேரஞ்செல்ல சண்பகத்தம்மாள் மணமகனுக்கும் குமாரசுவாமிக்கும் விருந்தளிப்ப, காஞ்சனமாலையே மணமகளுக்கு உணவு பரிமாறினள். போசனம் முடிந்தபின் ஆண்கள் தலைவாசற் புறத்தே பேசிக்கொண்டிருக்க, காஞ்சனம் நகுலேசுவரியை தான்இருக்கும் அறைக்குள் அழைத்துச்சென்று அங்குள்ள "ஸோபா"வில் அவளை இருத்தித் தானும் பக்கத்தேயிருந்தாள்; இருந்த காஞ்சனம் தன் தமக்கையை அன்புமீதூரப் பாதாதி கேசபரியந்தம் பரிவுடன் பார்த்தாள்; தன் மிருதுவான கரத்தினுல் அவள் கரத்தை மெல்ல எடுத்துத் தன் கண்களில் ஒற்றி, "என் அக்கா, எல்லாம் சம்தோஷந்தானே" என்று இதமாகக் கேட்கும்போது, நகுலத்தின் கண்களில் நீர்த்துளிபக் கண்டு, மனம் பொருளாய்க் காஞ்சனம் தன் முன்றானையால் அவள் கண்களை உடனே ஒற்றி "என்ன, அக்கா, சிரிக்கவேண்டிய இந்த நேரத்திலும் அழுகையா அகக" என்று சொலலி அவளை ஆற்றினுள்; தேறிய நகுலம் காஞ்சனத்தை அன்புடன் பார்த்து "என் அருமைத்தங்காய், நீரும் உங்கள் அம்மா ஐயா அண்ணவும் எங்களுக்கு எத்தனேரமும் மனப்பூர்வமாகச் செய்துவரும் நன்மைகளுக்கு ஒன்றுக்கும் பதிரு ஏழைகளாகிய நாங்கள் என்ன பதில் நன்மை செய்யப் போகிறோம் என்பதையிட்டுத்தான் கவலைப்படுகின்றேன்" என்று சொல்லுதலும், காஞ்சனம் புன்முறுவல்பூத்து "அக்கா, பிறருக்கு ஒரு நன்றியைச் செய்தாலன்றிரு பதில் நனறி செய்யவேண்டும்; உங்கள் அம்மாவும் ஐயாவும் அண்ணவும் உங்களுக்குக் கடமைசெய்ய வேண்டியவர்கள்; நானும் என் அருமையான அக்காளுக்கு ஏதும் நன்மைசெய்திருந்தால அது என் கடமையாக முடியுமேயல்லாமல் வேறென்றுமாகாதே; அக்கா, இல்லாத கவலையை உள்ளதாகக் கற்பித்துக் கவலைப்படாதீர்கள்; நாங்களவேறு நீங்கள் வேறென்று ஒருபோதும் நினையாதீர்கள அக்கா, அது எனக்குப் பொல்லாத மனத்துயரத்தைதரும்" என்று வேற்றுமை நீக்கிச் சொன்னுள். இவ்வார்த்தைகளைக் கேட்ட நகுலேசுவரி பெருமகிழ்ச்சியடைந்து, தன் தங்கையின் அன்பைப் பாராட்டி மனமுருகினுள். பின்னர் அவள் காஞ்சனத்தை நோக்கி "தங்காய், நான் இனிமேல் இடையிடையே இங்கே வந்து உம்மையும் அம்மா ஐயாவையும் கண்டுகொண்டுபோக முடியும்; ஆனல் உமது அக்காள் புவனம் உம்மைக்காண ஆசைப்படுகிறாள்; ஆனதால் இடையிடையே நீர் அங்கே போகவேண்டும்; நானும் அவரும் இருக்கும்போது அங்கே வருவது உமக்கு வசதியினமாக இருந்தால் நானும் அவரும் மாமாவீட்டிலிருக்கும் வேளைகளில் நீர் உங்களுடைய அக்கா சகோதரங்கள் தாயார் இருப்பதாகிய அந்த வீட்டிற்குப் போய்வரலாந்தானே; அந்த வீடும் உங்கள் வீடுதானே, தங்காய்" என்று பரிவுடன் சொல்லுதலும், "அக்கா, நீங்கள் கவலைப்படவேண்டாம்; உங்களுடைய அவர் எனக்கு அக்காள் புருஷன்தானே; ஆனதால அவர் எனக்குச் சிறியதத்தை முறையாவர்; நான் இனி அந்தவீட்டிற்கு மாதந்திரமல்ல, நீங்கள் உங்கள் மாமாவீட்டிலிருந்தால் அங்கும் வரலாந்தானே" என்று காஞ்சனம் சமாதானங் கூறினுள். பினனரும் சிறிதுநேரம் இரு சகோதரிமாரும் அன்புடன் சம்பாஷித்து அந்த அறையைவிட்டு வெளியேவந்தனர். முருகேசபிள்ளையும் சண்பகத்தம்மாளும் தங்கள் செல்வத்திற்குத் தக்கவாறு மணமக்களுக்குப் புத்தாடை ஆபரணம் முதலியன கொடுத்துச் சன்மானஞ் செய்தார்கள்; சண்பகத்தம்மாளே மீளவும் தம்பதிகளை அழைத்துக்கொண்டு போய்ப் பெண் வீட்டில் விடுத்து அவர்களிடம் உத்தரவு பெற்றுக் கொண்டு தங்கள் வீட்டிற்கு மீண்டாள்; சில தினஞ் சென்றபின் ஒரு சுபதினம் பார்த்துச் சண்பகத்தம்மாள் மணமக்களை முருகுப் பிள்ளை யுடையார் வீட்டிற்குக் கூட்டிக்கொண்டு சென்றபோது உடையாரும் மனைவியும் அவர்களெல்லாருக்கும் விருந்தளித்துத் தம்பதிகட்குச் சன்மானமுஞ் செய்தனர்.

சொல்வார் சொன்னலும் கேட்பார்க்கு மதியென்ன?

இங்ஙனம் சிலநாட் சென்றபின் நகுலேசுவரி தன் மாமன் மாமி வீட்டிலேயே வசித்து வருவாளாயினுள்; இடையிடையே கணவனும் தானும் தங்கள் வீட்டிற்குச் சென்று சிலநாள் அங்கே தங்கி மீண்டு வருவதுண்டு; சிவகாமித் தாயும் சிதம்பரப்பிள்ளையும் தங்கள் மருகியின் நற்குண நற்செய்கைகளைக் கண்டு அவள்மீது அதிக நேசமும் விசுவாசமும் வைத்தாராய், மருமகளென்பதை மறந்து தங்கள் சொந்தப் புதல்வியெனப் பாவித்து நடந்தும் நடத்தியும் வந்தார்கள்; சிவகாமித் தாய் தான் விரும்பிய மருமகள் தங்கள் வீட்டில வந்து சேர்ந்தாளே என்று சந்தோஷப்படுவாள்; சிதம்பரப் பிள்ளை இந்த அருமையான மருமகளை விபரீதமாக விளங்கி நான் அந்த நேரம் புறக்கணிக்க நினைத்தேனே யென்று தம்மைத்தாமே குறை கூறுவர். தனது மைத்துனியைப்பற்றிச் சுந்தரேசுவரி கொண்ட மகிழ்ச்சிக்கு எல்லையில்லை யெனலாம். அவள் நகுலேசுவரியைப் பார்த்து "உங்களை நான் அக்காள் என்றழைப்பதோ, அண்ணி என்றழைப்பதோ, எப்படியழைப்பதென்று எனக்குத் தெரியவில்லையே" என்று உவகை பெருக இடையிடையே சொல்லி வருவாள்; "நீர் எப்படிச் சொன்னலும் எனக்குச் சம்மதந்தான்; ஆனல் நான் உம்மை என் தங்கை யென்று தொன்மைபோல் அழைப்பேன்" என்று புன்னகை அரும்பச் சொல்லுவாள் நகுலம். நகுலேசுவரி தன் கணவனுடைய குறிப்பறிந்து நடப்பதோடு மாத்திரம் அமையாது, தன் மாமி மாமன் மைத்துனி யென்னு மிவர்க

(தொடர்ச்சி 5-ம்பக்கம்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

திரு வி. கனகசபைப்பிள்ளை

திருவாளர் ராவ்ஸாஹிப் எஸ். வையாபுரிப்பிள்ளையவர்கள் B. A., B. L.,

சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆங்கிலக்கல்வி தமிழ் நாட்டிற் பரவத் தொடங்கிற்று. இதன் பயனாக, ஆங்கிலங் கற்ற தமிழறிஞர்கள் பலவேறு வழிகளில் தமிழ்ப் பணி செய்ய முற்பட்டனர். வசன நூல்கள், நாடகங்கள், விஞ்ஞான சாஸ்திர நூல்கள் முதலியவற்றை அவ்வத்துறையில் தகுதியுடையவர்கள் எழுதி வந்தார்கள். சிலர் பழைய இலக்கண இலக்கியங்களை அச்சிற் பதிப்பித்துப் பண்டைத் தமிழறிவைப் பரப்பினர். சிலர் தமிழ்நாட்டுப் பூர்வ சரித்திரத்தைச் சிலாசாசனம், பண்டை யிலக்கியங்கள் முதலியவற்றின் துணை கொண்டு புலப்படுத்தினர். சிலர்தமிழரின் பண்டைக்கால நாகரிகச் சிறப்பைத் தமிழ்நூல்களின் ஆதரவு கொண்டு தெளிவித்தலை மேற் கொண்டனர். கடைசியிற் கூறிய முயற்சியில் இடுபட்டவர்களிற் சிறந்தவர் திரு. வி. கனகசபைப் பிள்ளை.

கனகசபை தமிழ்க் கல்வியில் மேம்பட்டு விளங்கிய ஒரு வித்வ குடும்பத்தைச் சார்ந்தவர். இவரது தந்தை, விசுவநாதபிள்ளை யாழ்ப்பாணத்து மல்லாகம் என்ற ஊரிலிருந்து வந்தவர். அங்கேயுள்ள அமெரிக்கமிஷன் அதிகாரிகளான டாக்டர் வின்ஸ்லோ, பெர்ஸிவல் முதலியவர்களால், சி. வை. தாமோதரம்பிள்ளை முதலானவர்களோடு கூடத் தமிழ் நாட்டுக்குக் கல்வியின் பொருட்டு அனுப்பப் பெற்றவர். சென்னைச் சருவகலாசாலையில் பீ.ஏ. பட்டம் பெற்றபின், அரசாங்கத்தில் தமிழ் மொழிபெயர்ப்பாளராயிருந்தவர்; பல ஆங்கில நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்தவர்; தமிழ்-ஆங்கில அகராதி யொன்று இயற்றிச் சென்னைக் கிறிஸ்தவ இலக்கிய சங்கத்தின்மூலம் வெளியிட்டவர். யாழ்ப்பாணம் தமிழ்க் கல்விக்குச் சிறந்தநாடு என்ற கீர்த்தியை வளர்த்தவர்களுள் இவர் ஒருவர். இவரது ஏகபுத்திரரான கனகசபைக்குத் தமிழார்வம் பிறவியிலேயே அமைந்தது என்று கூறுதல் மிகையல்ல.

கனகசபை பிறந்தது 25-5-1855 இல்; சென்னை கோமளீசுவரன பேட்டை சந்திரபானு தெருவிலுள்ள ஒரு வீட்டில். இவரது இளமைப் பருவத்தைக் குறித்து விசேஷமாக ஒன்றும் தெரியவில்லை. ஆனால் கல்வியில் மிகவும் கருத்தூன்றியிருந்தாரென்று ஊகிக்கலாம். ஆனரபிள் ராமநாதன், ஸோ. பொன்னம்பலம் முதலானவர்களுடன் சென்னை அரசாங்கக் கலாசாலையிற் கற்று மிக்க இளவயதிலேயே பீ. ஏ. பரீட்சையில் தேறிப் பட்டம் பெற்றனர். இவரை (Boy Graduate) பட்டதாரிப் பையன் என்று பலரும் குறிப்பிட்டு வந்ததாகக் கூறுவர். தமிழறிவிலும் சிறந்தவராகவே இவர் விளங்கினர். ஆனால், பண்டிதர்களிடத்தில் வரன் முறையாகக் கற்றனரென்று தெரியவில்லை. தமது தந்தையாரிடம் கேட்டுத் தெளிந்து தமது தமிழறிவை விருத்திபண்ணிக் கொண்டனர் போலும். அறிவுநலத்தைப் பேணிக் கொண்டது போலவே உடல் நலத்தையும் இவர் இளமையிற் பேணிவந்தனர். ஒரு முகம்மதிய பயில்வானிடம் தேகபபயிற்சி முறைகளைக் கற்று நாள்தோறும் அப்பியாசம் செய்து வந்தனர்.

பட்டம் பெற்றவுடனேயே தபால இலாகாவில் ஓர் உத்தியோகம் கிடைத்தது. ஆனால், தமது அறிவும் ஆற்றலும் பிரகாசிப்பதற்கும் தமது உயிராசையாகிய தமிழாராய்ச்சி பெருகுதற்கும் இவ்வுத்தியோகம் ஏற்றதன்றென முதலில் நினைத்தாரெனத் தோன்றுகிறது. ஏனெனில், சட்டப் பரீட்சைக்குப் படித்து பீ. எல். பரீட்சையிலே தேறி, ஓர் ஆண்டு ரஜாப்பெற்று, மதுரையில் வழக்கறிஞர் தொழிலிலும் இவர் அமர்ந்திருந்தாரென அறிகிறோம். இவ்வாறு அமர்தற்கு முன் மதுரையில் அமெரிக்கன் மிஷன் ஆஸ்பத்திரியிலிருந்த தமது அம்மானாகிய டாக்டர் பொன்னையாவின் புதல்வி ஸ்ரீமதி. செல்லம்மாளை 1876-இல் மணம் புரிந்தனர். மதுரையிலே ஸேர். எஸ். சுப்பிரமணிய ஐயரவர்களுடைய நட்பையும் இவர் பெற்றனர்.

ஆனால், வழக்கறிஞர் வேலையிலுள்ள இடர்ப்பாடு இவரை மீண்டும் தமது முன்னுத்தியோகத்திற்கே திரும்பும்படி செய்துவிட்டது. ஓரளவு லௌகிக சௌகரியங்கள் இருந்தாலன்றி இலக்கிய ஆராய்ச்சி இயலாதல்லவா? இந்தச் சௌகரியங்களை இவ்வுத்தியோகம் தந்ததனால் ஒருவாறு அதில்திருப்தியுங் கொண்டார். தபால் இலாகாத் துறையிலேயே தமது ஆயுள் முழுதுங் கழிக்கவும் அவகாசம் நேர்ந்தபொழுது தமிழாராய்ச்சி செய்து வரவும் இவர் உறுதி பூண்டனர். சிந்தையின் நிறைவே சிறந்த செல்வமென்று எண்ணினர். தமது உத்தியோக முறையில் இவர் மேன மேலும் சிறப் பெய்தினர். இவரது அறிவாற்றல் முதலிய தகுதிகளும், நேர்மையும், சிரத்தையும் இவரது முன்னேற்றத்திற்குக் காரணமாயிருந்தன. அதிவிரைவில டிவிஷனல் மேலதிகாரி என்ற பதவியை அடைந்தனர். இப்பதவியின் நிர்வாக முறையில் தமிழ்நாட்டிற் பல இடங்களுக்கும் இவர் சுற்றுப் பிரயாணம் செய்யும்படி நேர்ந்தது. இப்பிரயாணங்களால தமிழாராய்ச்சிக்குரிய சில வசதிகள் எதிர்பாராதவண்ணம் இவருக்கு எளிதிற் கிடைத்தன.

அக்காலத்திற் சங்க இலக்கியங்களிற் பெரும்பாலன அச்சில் வெளிவரவில்லை; ஏட்டுப் பிரதிகளாகவே சிற்சிலரிடத்தில அருகியிருந்தன. இவைகளின்றி இலக்கியக் கல்வியும் இலக்கிய ஆராய்ச்சியும் நடைபெற இயலாது. ஆகவே, சென்ற இடங்களிலெல்லாம் அச்சில வாராத தமிழ் நூல்களின ஏட்டுப் பிரதிகளைத் தேடிப் பெறும் முயற்சியைக் கைக்கொண்டனர். ஏராளமான ஏட்டுப் பிரதிகளைத் தொகுத்து வைத்திருந்தனர். அவைகளைக் கடிதத்திற் பெயர்த்தெழுவதற்கு அப்பாவுப்பிள்ளை யென்ற ஒருவரை அமர்த்தித் தம்முடனேயே 20 வருஷ காலமாக வைத்துக் கொண்டிருந்தனர். அப்பாவுபிள்ளையும் ஏடுகளைப் பிரதிசெய்தும், தமஎஜமானர் சொல்லும் விஷயங்களைக் குறித்து வைத்தும், அவர் எழுதியவற்றைச் சுத்தப்பிரதி செய்தும் உதவி வந்தார். தாம் தேடிப் பெற்ற அரிய பிரதிகளைத் தட்டுத்தடையின்றிப் பதிப்பாளர்களுக்குக் கொடுத்துப் பயன் பெறவும் செய்தார். உதாரணமாக டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்களுக்குப் பத்துப்பாட்டு, புறநானூறு சிலப்பதிகாரம் முதலிய பண்டையிலக்கியப் பிரதிகளை உதவிப்பேருபகாரம் புரிந்தனர். கனகசபையைப் போன்று விரிந்த மனப்பான்மை தமிழறிஞர்களுக்கு இருந்திருக்குமாயின எத்தனையோ பழந்தமிழ் நூலகளை நாம் இழந்திருக்க மாட்டோம். [illegible] பிரதிகளைக் கொடுத்து உதவி புரிந்ததேயன்றித் தாம் அருமையாகக் கண்டுதெளிந்த ஆராய்ச்சியுண்மைகளையும் தமிழறிஞர்களுக்குத் தாராளமாக வெளியிட்டு வந்தனர். உண்மையெனத் தெளிந்தவற்றை மறைத்து வைப்பதனாற் சிறிதும்பயனில்லை; ஆராய்ச்சி பெருகாது; தமிழறிவு பரவாது. இவ் விளைவினை நன்குணர்ந்திருந்த [illegible]ப. —வரும்.

செந்தமிழ்

இயற்கை விநோதம்

திருமயிலை, திருவாளர், சே. வே. ஜம்புலிங்கம்பிள்ளை

ஆகாயத்திலே அந்தரத்தே நிலையுற்று மனோகதியும் பின்னிட மகா கதிகொண்டு ஓடித்திரிந்து சரித்து உலவுவனவாகிய கிரக நக்ஷத்திராதி ஒளியுடைய பொருள்களை அளவிடப்புகின் அவை பலகோடியினும் அப்பாற் சென்று பெருகும். நமது சூரியனைக் காட்டிலும் பன்னூறு மடங்கு விரிவுடைய நக்ஷத்திராதிகள் எத்தனையோ கோடியுண்டு. நமது சூரியமண்டலத்திலும் பல மடங்கு விரிவும் விஸ்தீரணமுமுடைய மண்டலங்கள் அளவிறந்தன, ஒவ்வொரு மண்டலத்திலும் எத்தனையோ கிரகங்கள் எத்தனையோ நக்ஷத்திரங்கள் எத்தனையோ சந்திரர்கள் உண்டு. இவையெல்லாம் அந்தரத்திலே ஆதாரமின்றி நிலைபெறுமாறும் நிலைபெற்றும் அறிவாற்றலிற் சாதுரியமுற்ற சித்துப் பொருளகளை ஒத்துத் தத்தமக்குரிய கதிகளினும நெறிகளினும் சிறிதும் பிறழ்ச்சியுறாது குறித்த எல்லையிற் குறைதத நெறிவழியாகக் குறித்த கதியோடு ஆங்காங்குச் சென்று தத்தமக்குரிய கருமங்களை கிரமந் தவறாது நடாத்திவருமாறும் அதிசயத்தைத் தருவனவாம்.

2 ஒவ்வொரு மண்டலத்திலுமுள்ள ஒவ்வொரு கிரகத்துக்குமுரிய சந்திரரெலலாம் தம்மையும் சுற்றத் தமக்குரிய கிரகங்களையும் சுற்ற, அந்தக் கிரகங்களும் அவ்வண்ணமே தம்மையுஞ் சுற்றத் தமக்குரிய சந்திரரோடு தத்தமது சூரியரைச் சுற்ற, இந்தச் சூரியரும் இப்படியே தம்மையுஞ் சுற்றித் தத்தமக்குரிய கிரகநக்ஷத்திர சந்திரரோடு தங்கள் தங்கள் மகா சூரியரைச் சுற்றவும் இவ்வாறே பிரமாண்டத்துள்ள கோடானுகோடி கிரகாதிகள தங்கள் தங்கள் கதி நெறிகளிற் சிறிதும் பிறழாது ஓடித்திரிந்து கொண்டிருக்கும வரிசையும் கிரமமும காலவரையறை முதலிய நியதிகளும் விசித்திரமானவை.

3 இந்தக் கிரகாதிகள் அனைத்தும் இன்னபெருஞ் சிறப்பினவாகிய நியதிகளில் நிராதாரமாக நிலையுதலுறுமையுமாறு அவ்வவற்றிற்கு வேண்டிய அளவைப்படி அமைந்துள்ள பிரமாணமும அப்பிரமாணத்திற்குத் தக்க விசையும் இப்பிரமாண விசைகள் இரண்டும் கொண்டு இவைகள் தக்கவாறு ஒன்றையொன்று சுற்றித் திரியுமாறு அவை கர்ஷணுதி பந்தங்களாற பிணிக்கப்பெற்றுள்ள மரபும் வியக்கத்தக்கன.

4 இந்தக் கர்ஷணுதி அளவையும் அவ்வவற்றிற்குரிய கதி அளவையும், ஒன்றையொன்று சிறிதேனும் மிஞ்சுவதுண்டாயிற சொலலுதற்கரிய பேரிழுக்குகளும் பெருங்குழப்பங்களும அவற்றின்கண் நிகழ்ந்துவிடுமாக, அங்ஙனமாகிய பிறழ்ச்சிகள சிறிதேனும் நிகழாவாறு அவ்வக் கிரகாதிகளிடத்தே தக்க அளவைப்படி ஒன்றையொன்று மிஞ்சாத கர்ஷணகதி விசைகள் அமைந்திருக்குமாறும் இந்த விசைகளும் அவ்வந்தக் கிரகாதி சோதிகளிடத்துச் சகசமாயுள்ளனவாகாது வேறுபிற சோதிகளாற்றானே பெரும்பான்மைபற்றிச் செலுத்தப்படுமாறும் ஆச்சரியத்தை உண்டுபண்ணுவனவாம்.

5 இப்படிச் செலுத்தப்படுதலும் எத்தனையோ பல திசைகளினுள்ள எத்தனையோ பன்னூறு கிரகாதிகளாலாகவும் அவை எல்லாவற்றானுஞ் செலுத்தப்படும் மொத்த விசை அவ்வச் சோதியின் கதிமரபுகளுக்கியைந்த அளவைத்தாய் அமைந்துள்ள அந்தப் பெருநூதனமும, இன்னமும் இந்தக் கர்ஷண விசைகள் அவ்வச் சோதிகளிலே வேண்டிய அளவைப்படி சென்று தாக்குமாறு அவையெல்லாம் அவ்வதனுக்கியைந்த தூரத்தே நிறுவப்பெற்று நிற்குமாறும், இப்படியே இந்தக் கிரகாதி சோதிகள் ஒரு விநாடிக்குப பல்லாயிரகாதம், செலலத்தக்க அவ்வளவு விசையுடன் ஓடிச் சரிகுமாயினும் ஒன்றையொன்று தீண்டித் தகர்ந்தழிந்து பேரிடர் விளையாது விலகிச்செலலும் மரபும் மெச்சத்தக்கனவாம்.

6 இக்கிரகச் சூழல்களால் ஆங்காங்குள்ள சீவராசிகட்கும் அவைகளுக்கு நிலைக்களனுயுள்ள அண்டங்களுக்கும் விளைதற்குரியனவாகிய பிரயோசனங்களும் பிறவும் கடவுளின் அபார சக்தியைக் காட்டுவனவாம். இனி இப்பிரபஞ்சத்திற் சங்கத்தொருகூறு தானுமாகாத இச்சிறுபூமியினுள்ள கிராமாதிகளை அளவிடப்புகின் அவைதாமுந் தொகைக்கு அடங்கா. அவற்றை எடுத்து விரித்து விஸ்தரிப்பதுதான் எளிதின் முற்றுப்பெறுவதொன்றல்ல. ஆயினும சுருங்கச்சொல்லுமிடத்து, பூமிக்கணுள்ள தோற்றங்கள் இயக்கவகையாற் சரம் அசரம் எனவும் தோற்றவகையால் லோக, தாவர, மிருகங்களாகவும் பகுக்கப்படும். இவற்றுள் ஒருவகைத் தோற்றத்திலிருந்து அவ்வகையினதாகிய தோற்றமேயன்றிப் பிறிதொன்று தோன்றுத நியதியும் ஓரினத்துக்குரிய வித்திலிருந்து தோன்றும் தோற்றங்கட்கெல்லாம் அவ்வினத்திற்குரிய இலக்கணங்களெல்லாம் சிறிதும் தவறாது அமையும் மரபும் கூர்ந்து நோக்கற்பாலன.

7 ஓர் இனத்திற்குரிய ஒரு பொருளிற்றானே இராசகுணங்களான் வேறுபட்ட பல பொருள்கள் அமைந்திருக்கும் முறையும், அப்பொருள்கள் ஒன்றேடொன்று மாறுகொண்ட பல பருவங்களை அடையும் நெறியும் இங்ஙனமே பலவகையான பொருள்களைக் கொண்டிருந்தும் பலவகையான பருவங்களைச் சென்றடைந்தும் அப்பொருள்கள் தத்தம் இனத்திற்குரிய சுபாவிக தர்மத்தில் சிறிதும் பிறழாது விருத்திபெறும் சிறப்பும் பிறவும் ஓர் ஆஞ்ஞைவழி நிகழ்வனவே யன்றித் தற்செயலாய் நிகழ்வனவெனக் கோடல் மதியீனமாம். (தொடரும்)

விளம்பரமின்றேல்
பெரும்பணமில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓரியன்ரல் பாங்க் ஒவ் மலாயா லிமிற் றெட்

(ஐக்கிய மலாய் நாடுகளில் பங்காளரின் நிதி வரைவுளதாய் நிறுவப்பெற்றது)

8, மணிக்கூட்டுத் தெரு, யாழ்ப்பாணம்

மாட்சிமைதங்கிய தேசாதிபதியவர்களின் அனுமதியும் அங்கீகாரமும் பெற்று வடஇலங்கையில் சகலவித வங்கித்துறைகளிலும் ஈடுபட்டு உழைக்கும் தேசியவங்கி இது ஒன்றே.

இவ்விடத்தில்:—

1. கடைமுறை, நிரந்தரக் கட்டணங்கள் ஏற்றுக்கொள்ளுதல்;
2. அங்கீகரிக்கக்கூடிய தகுந்த பொறுப்புக்கு இலகுவானமுறையில் வட்டிக்குக் கடன்கொடுத்து வாங்குதல்;
3. இந்தியாவின் சகல பட்டினங்களுக்குத் தந்தியுண்டியல்களும்; கொழும்பு, மதுரை, சேலம், சென்னை, தூத்துக்குடி முதலிய இடங்களுக்குச் செக்குகளும், உண்டியல்களும் பரிமாறுதல்;
4. இந்திய நோட்டுகள் வாங்குதல் விற்றல் முதலியன சகலருடைய வசதிக்குமேற்ப கடைபெற்று வருகின்றன.

எஸ். பி. யோசேப்,
மானேஜர்.

(Mis. 206. 25-2-43—24-8-43) (வி)

பருத்தித்துறைப் பகுதி சுகாதாரவாரக் கொண்டாட்டமும் உணவுப் பொருட் காட்சியும்

அகில இலங்கைச் சுகாதாரவாரக் கொண்டாட்டத்தை சுகாதார உணவுப் பொருட் காட்சிகளோடு சேர்த்து, பருத்தித்துறைப்பகுதியார் 22-7-43 தொடக்கம் 24-7-43 முடிய ஹாட்லிக் கல்லூரியில் அதி விமரிசையோடு கொண்டாடினர். 22-ந் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 4மணிக்குப் பருத்தித்துறைப் பகுதிப் பாடசாலை மாணவர்களும் ஆசிரியர்களும் சேர்ந்து நகரத்திற் கூடாக, சுகாதாரத் திருநாளைப் பொதுஜனங்களுக்கு அறிவிக்கும் பொருட்டு ஒரு பவனி நடாத்தினர். வரவேற்புத் தலைவராக நியமிக்கப்பட்ட பருத்தித்துறைப்பகுதி D. R. O. திரு. A. பெருமையினர் அவர்களைத் தலைமையாகக் கொண்டு மேற்படி பவனியைச் சேர்ந்தவர்களும், பருத்தித்துறைப் பகுதிப் பிரமுகர்களும் பொதுஜனங்களும் பருத்தித்துறை வாடிவீட்டு முன்றலிற் குழுமினர். அத்தருணம் அவ்விடம் சமுகமளித்த வடபெரும்பகுதி வித்தியாதரிசி V. K. நாதன் அவர்களை வரவேற்புத்தலைவர் திரு. A. பெருமையினர் அவர்கள் வரவேற்று மாலைகூட்டி மேளதாள வாத்தியங்களோடு காட்சி மண்டபத்துக்கு அழைத்துச் சென்றனர். திரு. V. K. நாதனவர்கள் தமது நன்றியைத் தெரிவித்துக் காட்சியைப் பொதுஜனப் பார்வைக்குத் திறந்து வைத்தார்கள். காட்சி கண்கொளாக் காட்சியாக இருந்ததென்பதற்கு, கல்லூரியின் எந்த இடமும் வெறுமையாக இராமல் எங்கும் காட்சிப்பொருள்களால் நிறைக்கப்பட்டிருந்தமையே சான்றாகும். ஒரு பகுதியில் கண்ணையும் மனதையும் கவரத்தக்க சுகாதாரப்படங்கள். மற்றோர் பகுதியில் சுகாதார சுலோகங்கள். இன்னோர் பகுதியில் வீடு, இணை, மல சலகூடம் போன்ற மாதிரிப் பொருள்கள் காணப்பட்டன.

உணவுப் பொருட்காட்சியில் தற்கால உணவுப்பஞ்சத்தை நீக்குதற்கு உதவக்கூடிய சகல உணவுப்பொருள்களும் ஒருபுறமாகவும், அவற்றிலிருந்தும் நமக்குத் தற்போது கிடைக்கும் கோதுமையிலிருந்தும் பாகம்பண்ணிய பலவகை உணவுப்பொருள்களும் மற்றோர் புறமாகவும் வரிசை வரிசையாக இரு பெரிய மண்டபங்களில் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தன. பாடசாலை மாணவிகளும் ஆசிரியைகளும் இவ்வகைப் பொருள்களிலிருந்து, செலவுச் சுருக்கத்தோடு சுவைக்கு உருசியுடையதான புதுப்புது உணவுப் பதார்த்தங்களை நேரிற் தயாரித்துக்காட்டினர். அன்றியும் நூல் முறுக்குதல், நெசவு வேலை, கயிறு திரித்தல் முதலிய கைத்தொழில்களும் பாடசாலை மாணவர்களாற் செய்து காட்டப்பட்டன. செய்த மாதிரிப் பொருள்கள் பார்வைக்காக ஓரிடத்தில் வைக்கப்பட்டிருந்தன. சுகாதார வாரக் கொண்டாட்டக் காரியதரிசியும் பருத்தித்துறைப்பகுதிச் சுகாதாரப் பரிசோதகருமாகிய திரு. P. நடேசன் அவர்களும் திரு. A. பெருமையினர் அவர்களும் திரு. V. K. நாதன் அவர்களை ஒவ்வொரு காட்சியறைக்கும் அழைத்துச் சென்று அவற்றின் தன்மையைக் காண்பித்தனர். அதன்பின் ஒவ்வொரு காட்சியறையிலும் நூற்றுக்கணக்கானோர் நின்று ஒவ்வொன்றையும் பார்த்து மகிழ்ச்சியடைந்தனர். பின்பு திரு. V. K. நாதன் அவர்களை மத்தியாகக்கொண்டு ஒரு புகைப்படமெடுக்கப்பட்டது.

பி. ப. மாலை 6-30 மணிக்கு பருத்தித்துறைப்பகுதி பதில் நீதிபதி திரு. V. T. பண்டித குணவார்டினி அவர்கள் தலைமையில கூட்டம் ஆரம்பமாயது. தலைவர் தமது சொற்பொழிவில் தாம் தமிழில் பேசமுடியாதிருக்கிறதற்காக மனவருத்தமுற்றதோடு இவ்விதமான விசேட காட்சியை ஆக்கிவைத்த செயலாளர்களின் திறமையை வியந்தனர். அன்றியும் இலங்கை மாதாவின் இரு பெரும் புதல்வர்களாகிய தமிழர், சிங்களவர் என்னும் இரு பகுதியாரும் ஒருபகுதியாரின் திறமையை மற்றவர் அறிந்து கொள்வதற்கும் பாஸ்பா சிங்கேமுண்டாவுதற்கும் ஒருவருடைய பாஷையை மற்றவர் அறிந்திருத்தலின் அவசியத்தை எடுத்துக் காட்டினர்.

முதலாவது சொற்பொழிவாளராக விளங்கிய வடபெரும்பாக வித்தியாதரிசி திரு. V. K. நாதன் அவர்கள் மாசுமறுவற்ற சுத்த செந்தமிழில் கற்றோரும் மற்றோரும் விளங்கத்தக்கதாக, இக்காட்சிகளின் இலக்கு; தற்காலத்தில் நாம் உணவுப்பொருள் விஷயங்களிற் கவனிக்கவேண்டியன; நாம் நம்மை எப்படிச் சுகத்திலும் உணவிலும் குறைவில்லாமற் பாதுகாத்துக் கொள்ளலாம்; என்பவற்றை மிகத் தலைக்கமாகத் தெரியப்படுத்தினர்கள். அன்றியும் இவ்விடத்தில் கடந்தேறிய பொதுசேவைகளின் விசேஷங்களைப்பற்றித் தாம் பல முறை பத்திரிகைகள் மூலம் அறிந்திருப்பதாகவும் அதற்கு இக்காட்சியே போதிய சாட்சியாகுமென்றும் இதனை ஆக்கிய செயலாளர்கள் யாவருக்கும் தமது சந்தோஷத்தைத் தெரிவித்துக் கொள்வதாகவும், விசேஷமாக இதன் காரியதரிசியாக இருக்கும் சுகாதார பரிசோதகர் திரு. P. நடேசன் அவர்கள் தமது மாணவனென்றும், அவர்எத்தனையோ அரிய பெரிய காரியங்களைச் செய்யக்கூடிய வலலமை உள்ளவனென்றும், இன்னும் பல பொதுஜன சேவைகளை அவர் செய்வார் எனறு தாம் காத்திருப்பதாகவும் வியந்துகூறி முடித்தனர்.

இரண்டாவது சொற்பொழிவாளராகப் Dr. C. சபாபதியவர்கள் நாட்டுச் சுகாதாரம் எனனும் விஷயத்தில் புதிய அபிப்பிராயங்களுக்கும் பழையகாலக் கொள்கைகளுக்கும் முள்ள ஒற்றுமையைப் பழைய நூல்களிலுள்ள எடுத்துக்காட்டுதல்களோடுகூறி, சுகாதாரத்தின் ஐந்து முக்கிய பகுதிகளையும் தெளிவாக விளக்கிக் காட்டினர்கள்.

மூன்றாவது சொற்பொழிவாளராக பருத்தித்துறை D. R. O. திரு. A. பெருமையினர் அவர்கள் உணவுப் பொருள்கள் என்னும் விஷயத்தில் இக்காட்சியின் நோக்கத்தை விளக்கப்படுத்தியதுடன் உணவுப் பொருள்கள் தயாரித்துக் காட்டிய விதத்தை ஒவ்வொருவரும் அவதானிக்கவேண்டுமெனவும் அவற்றைச் செய்கைமுறையிற் கொண்டு வரவேண்டுமெனவும், நம்நாட்டிலே உண்டுபண்ணக்கூடிய உணவுப் பொருட்கள் அத்தனையையும் உண்டு பண்ணவேண்டிய அவசியத்தையும் விளக்கிக் கூறியதோடு உணவுப் பொருட்களை உண்டாக்குகிறவர்களுக்கு எவ்வெவ்வுதவி தேவையோ அவற்றையெல்லாம் தம்முன்னின்று உதவிபுரிய ஆயத்தமாக இருப்பதாகவும் கூறிமுடித்தார்.

சுகாதாரவாரக் கொண்டாட்டக் காரியதரிசி P. நடேசன் அவர்கள் தனது ஆசிரியரும் இப்போது காட்சியைத் திறந்து தன்னை மகிழ்வித்த வருமான திரு. V. K. நாதன் அவர்களுக்கும் மற்றும் யாவருக்கும் நன்றிகூற முதலாம்நாட் கொண்டாட்டம் முடிவுற்றது.

23-ந் திகதி வெள்ளிக்கிழமை மு. ப. 9 மணிக்கு மாதர் சிசுபரிபாலன மண்டபத்தில் தாய்மார் குழந்தைகள் நினக்கொண்டாட்டம் ஆரம்பமாயது.

ஸ்ரீமதி H. R. யோசேப் அம்மாள் அவர்கள் இதற்குத் தலைமை வகித்தார்கள். முதலாக சுகபலத்திற் திறமான குழந்தைகளின் போட்டி நடந்தது. வெற்றியடைந்த குழந்தைகளுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன. பருத்தித்துறைப்பகுதி வைத்தியத் தலைவர் Dr. C. M. வன்னியசேகரம் அவர்களாலும் ஸ்ரீமதி A. P. வேலுப்பிள்ளை அவர்களாலும் பருத்தித்துறைச் சுகாதார பரிசோதகர் திரு. P. நடேசன் அவர்களாலும் மாதாக்கள் கவனிக்கவேண்டியன; குழந்தைகளைப் பேணும்முறை ஏனும விஷயங்களில சொற்பொழிவுகள் செய்யப்பட்டன.

பிற்பகலில் வைத்திய சுகாதாரப் பகுதித் தலைவர் Dr. S. F. செல்லப்பா அவர்கள் காட்சியைத் திறந்து வைத்தனர். Dr. S F. செல்லப்பா அவர்களும் Dr. S C தனராசா அவர்களும் ஒவ்வொரு காட்சி மண்டபத்தையும் பார்த்து மகிழ்ச்சி யெய்தினர்.

பி. ப. 6 மணியளவில் பருத்தித்துறை சனசமூகசேவா சுகாதார சங்க வருடாந்தவிழா Dr. C. சபாபதியவர்கள் தலைமையில ஆரம்பமாயது. Dr. S F. செல்லப்பா அவர்கள் சொற்பொழிவாளர்களாக விளங்கினர். அவர் தமது சொற்பொழிவில், இச்சங்கத்தின் வருடாந்த அறிக்கை தமக்கு மிகுந்த சந்தோஷத்தை புண்டாக்கிற்றென்றும் நம்நாட்டுப் பெண்மணிகள் இத்தகைய அரிய தொண்டுகளைச் செய்வதற்கு முன்வரவேண்டுமென்றும், அங்ஙனம் செய்வதனால் நம்நாட்டுத் தாய்மார் குழந்தைகள் மரணவிகிதத்தைக் குறைத்துக்கொள்ளலாம் என்றும், வருடாந்த அறிக்கையின்படி இச்சங்கத்தின் உதவியோகஅங்கத்தவர்களாக இருந்த இரு பெண்மணிகள் ஒவ்வொரு ஆண் குழந்தைகளோடு ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும், இதைக் கேள்விப்படுகிற ஒவ்வொரு பெண்மணியும் இதிற் சேர்ந்துகொள்ளப் பெரிதும் விரும்புவார்களென்றும் தாம் நினைப்பதாகவும், அன்றியும் யாழ்ப்பாணப் பெண்கள் மருத்துவவேலை பழகுவதற்கு முன்வரவேண்டுமென்றும் தான் விரும்புவதாகவும் கூறி முடித்தார்.

அதன்பின்பு காரியதரிசி திரு. P. நடேசன் அவர்கள் Dr. S. F. செல்லப்பா அவர்களுக்கும் மற்றும் பெரியோருக்கும் நன்றி கூறியதுடன் நம்நாட்டுத் தாய்மார் குழந்தைகளைக் காப்பாற்றும் இச்சேவா சங்கத்தை ஒவ்வொருவரும் ஆதரிக்கவேண்டுமென்றும் சபையோரை வற்புறுத்திக் கேட்டுக்கொண்டார்.

பி. ப. 7-30 மணியளவில் வடபெரும்பகுதி வித்தியாதரிசி திரு. V. K. நாதன் அவர்களின் அக்கிராசனத்தின்கீழ், பருத்தித்துறைப் பகுதிப் பாடசாலை மாணவர்களின் சுகாதார சங்கீதவிழா ஆரம்பமாயிற்று. பிள்ளைகள் சுகாதார உண்மைகளை நடித்துக்காட்டிய திறமையாவராலும் வியக்கத்தக்கதாக இருந்தது. பருத்தித்துறை விடுதிப் பெண்பாடசாலையாரால் நடிக்கப்பட்ட சுகாதாரநாடகம்; பருத்தித்துறை றோமன் கதலிக் பாடசாலையாரால் காட்டப்பட்ட தினுந்த சுகாதாரப் பழக்கவழக்கங்களும் புலோலி மெதடிஸ்த மிஷன வித்தியாசாலை தும்பளைச் சிவப்பிரகாச வித்தியாசாலை, தட்டாதெரு மெதடிஸ்த மிஷன வித்தியாசாலை என்பவற்றால் நடித்துக் காட்டப்பட்ட நோய்களைப்பற்றிய நடித்தல்களும், கற்கோவளம் மெதடிஸ்த பாடசாலையாரால் நடிக்கப்பட்ட மாதர் சிசுபரிபாலன நடித்தலும் எவர் மனத்தையும் கவரும் தன்மையனவேயாம்.

விழாமுடிவில் புலோலி மெதடிஸ்த மிஷன் வித்தியாசாலைத் தலைமையாசிரியர் திரு. G. M. ஆழ்

(தொடர்ச்சி 6ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம்பலவிதக்கதை

2ம் பக்கத் தொடர்ச்சி

ளுடைய மனக் குறிப்பையும் அறிந்து அவரவர்க்குத் தக நடந்து வந்தாள். இப்படி அவள் நடந்து

" மாமியும் மருகியும் மருவி வாழுதல்
நானிலத் தில்லையால்..... "

என்ற பழைய வாக்கியத்தைப் பொய்யாக்கினாள். சின்னம்மாளும் கந்தசாமியும் நகுலேசுவரி மாமன் வீட்டில் இருக்குங் காலத்தில் இடையிடையே அங்குப் போய் வருவதுண்டு; ஆனாற் குமாரசுவாமி அங்கே போதல் அரிதினும் அரிதாயிருந்தது; குமாரசுவாமி முருகேசபிள்ளை வீட்டிற்கு மாத்திரம் இடையிடையே கூசாது போய்வருவான்; இவைகளைத் தன்னுள்ளத்தில் அவதானித்த சுந்தரேசுவரி துயரங்கொண்டாளாய் "அண்ணி, உங்கள் அண்ணா இங்கு வராமல் விட்டுவிட்டார்; எங்கள் ஐயா செய்த குறையை அவர் இன்னமும் மறக்கவில்லை போலும்" என்று வினவ, "அப்படியொன்றுமில்லை, தங்கைச்சி, அவர் அதிகமாக ஒருவர் வீட்டிற்குப் போகக் கூச்சப்படுபவர்; அதனாற்றான் வருவதில்லையென்று நினைக்கிறேன்; உங்கள் ஐயா என் மாமா எங்களுக்கு ஏதும் குறை செய்திருந்தாலல்லவோ அண்ணா குறை நினைப்பது" என்று சமாதானம் சொன்னாள் நகுலம். "அண்ணி, சொல்வார் சொன்னாலும் கேட்பார்க்கு மதியென்ன? காஞ்சனத் தங்கைசசி வீட்டிற்குப் போக மாத்திரம் உங்கள் அண்ணாவிற்குக் கூச்சமில்லை; எங்கள் வீட்டிற்கு வருவதற்குத்தானா கூச்சம்" என்று புறத்தே வெறுப்புக்காட்டிச் சுந்தரேசுவரி சொல்ல, நகுலேசுவரி சிறிது யோசித்து "அண்ணா இங்கே வாராததற்குக் காரணம அவருக்கும் உமக்குந்தான் விளங்கும்; எனக்கெப்படித் தெரியும்" என்று புன்சிரிப்புடன் மொழிந்தாள்; "போங்கள், அண்ணீ, உங்களை ஏதும் கேட்டால், உங்களுக்கு என்னைப் பரிகாசஞ் செய்யத்தான் தெரியும்" என்று மழலை மொழி பேசிக்கொண்டு, இருந்த இடத்தைவிட்டு எழுந்து போக முயல, நகுலேசுவரி "என்னைக் கோபிக்கவேண்டாம், இனிமேல் நான் இப்படி யொருபோதும் சொல்லமாட்டேன்" என்று சொல்லி அவள் கரத்தைப் பற்றித் தன் பக்கலில அவளை இருத்தினாள்.

"ஓம்"

தன் தமையன் வராமையையிட்டுச் சுந்தரேசுவரி கவலைபபடுகிறாளென்பதை உள்ளபடியுணர்ந்தநகுலேசுவரி, தன்னுடைய தாயும் சகோதரன் கந்தசாமியும் ஒருநாள் அங்கேவந்து தங்களைப் பார்த்துக்கொண்டு மீளப்போகுஞ் சமயத்தில் "அம்மா, எங்கள் அண்ணாவைக் காண விருப்பமாக விருக்கிறது; அவரை நான் சொன்னதாக வரும்படி சொல்லுங்கள்" என்று தாயிடஞ் சொல்ல, தாய் "அப்படியே சொல்லியனுப்பிவைக்கிறேன் மகளே" என்று சொல்லிவிட்டுத் தன் மகனுடன் மீண்டாள்; மீண்ட தாய், தன் மூத்த மகனைக் கண்டு செய்தியைச் சொல்ல, அவன் உடனே புறப்பட்டுச் சிதம்பரப்பிள்ளை வீட்டிற்குச் சென்றான்; அங்கே அந்த நேரத்திற் சிதம்பரப்பிள்ளையும் மகனும் இல்லையாக, சிவகாமித்தாயும் நகுலேசுவரியும் குமாரசுவாமியை அன்புடன் வரவேற்று உபசரித்தார்கள்; அந்தச் சமையத்திற் சுந்தரேசுவரியும் அங்கு வந்து ஒரு புறத்தே ஒதுங்கி நின்றாள்; சற்று நேரஞ்செல்ல சிவகாமித்தாய், "நீங்கள் பேசிக்கொண்டிருங்கள்" என்று மருமகளுக்கும் மகளுக்கும் பொதுப்படச் சொல்லிவிட்டுத் தான் ஏதோ கருமார்த்தமாக அவ்விடம்விட்டகன்றாள்; குமாரசுவாமி நிலத்தைப் பார்த்தபடியே யாதும் பேசாது சிறிது நேரம் இருந்துவிட்டு "தங்கைச்சி, என்னை வரும்படி சொன்னீராமே" என்று சொல்லி முடிப்பதற்கிடையில் "ஏன், அண்ணா, நீங்கள் இங்கு அதிகம் வருவதில்லை" என்று நகுலேசுவரி அன்புடன் வினவ, "இங்கு வர நேரமுமில்லை....." என்று வசனத்தை முடித்தலின்றி இழுத்தான் குமாரசுவாமி; "ஏன், நேரமுமில்லை, மனமுமிலலை என்று வாக்கியத்தை முடித்துவிடலாமே" என்று மெல்லச் சொன்னாள் சுந்தரேசுவரி; கேட்ட குமாரசுவாமி திடுக்கிட்டான்; சுந்தரேசுவரி இப்படிச் சொல்லுவாளென அவன் எதிர்பார்த்தானல்லன்; "அப்படியொன்றுமில்லை; இனிமேல் நான் இடையிடையே இங்கு வருவேன்" என்று அவன் பதில் சொன்னான்; "மற்றையவர்களுக்காக வராவிட்டாலும் உங்களுக்காக இந்த வீட்டிற்கு இனிமேல் உங்கள் அண்ணா வரலாமே; இனிமேல் எப்பொழுது வருவதென்று கேளுங்கள் அண்ணி" என்று கிளியெனமொழிந்தாள் சுந்தரேசுவரி; "தங்கைச்சி, நீங்கள் பேசுந் தமிழ் அண்ணாவிற்கு விளங்குந்தானே; இடையில் நானொருத்தி மொழிபெயர்ப்பதற்குத் தேவையில்லையே" என்று புன்சிரிப்புடன் சொன்னாள் நகுலம்; நாணமுற்றவளாய்க் கதவண்டை மறைந்து நின்றாள் சுந்தரேசுவரி; "இனிமேல் நிச்சயமாக வருவேன்" என்று சொல்லிவிட்டுப் புறப்படுதற்கெழுந்தான் குமாரசுவாமி; அதைக்கண்ட மருமகள் மாமியைக் கூப்பிட, அங்கே வந்த சிவகாமித்தாய் "தம்பீ, இங்கே வராமல் விட்டுவிட வேண்டாம்; இடையிடையே வந்துபோகவேணும்" என்று அன்புடன் சொல்லுதலும் "ஓம்" என்று சொல்லி மூவரிடத்தும் உத்தரவு பெற்றுக்கொண்டு மீண்டான் குமாரசுவாமி.

உத்தியோகம் பெற முயற்சி

ஒரு தினம் குமாரசுவாமி முருகேசபிள்ளை வீட்டிற்குச்சென்றிருக்கும்போது, ஏதோ பத்திரிகையைப் படித்துக்கொண்டிருந்த முருகேசபிள்ளை குமாரசுவாமியைப் பார்த்து "தம்பி, இன்னும் இரண்டு மாசத்துள் உயர்தர கிளேறிக்கற் பரீட்சை நிகழுமென்று இந்தப் பத்திரிகையில் அரசினர் வெளியிட்டிருக்கின்றனர்; நீரும் அந்தப் பரீட்சையிற் பிரவேசிப்பதற்கு முயற்சிசெய்தாலென்ன" என்று கேட்டார்; "ஐயா, நான் படிப்பித்தற்றொழிலையே விரும்புகிறேன்; உபாத்திமைத் தராதரப் பத்திரம் பெறுதற்கான ஆயத்தஞ் செய்து வருகிறேன" என்று விநயமாகப் பதில் சொன்னான்; "அப்படியானால் உமது தம்பியார் கிளேறிக்கற் பரீட்சையிற்புக முயற்சிசெய்யலாமே" என முருகேசபிள்ளை கேட்க, குமாரசுவாமி "ஆம், ஐயா, அப்படிச்செய்வது நல்லது தான்" என்று அவருக்குச் சொல்லிவிட்டு, அவரிடம் அனுமதி பெற்றுக்கொண்டு தன் வீட்டிற்குப் போய்த் தாய்க்கும் தன் தம்பி கந்தசுவாமிக்கும் விஷயத்தைச் சொன்னான்; கந்தசுவாமி குறித்த பரீட்சையிற்பிரவேசித்தற்கு வேண்டிய முயற்சிகள் செய்தான்; குமாரசுவாமியும் தான் எடுத்துக்கொண்ட உபாத்திமைப் பரீட்சையிற் பிரவேசித்தற்கான படிப்பைப் படித்து வருவானாயினான். (வரும்)

கொழும்பில் சமய வகுப்புகள்

சென்ற பதினொரு ஆண்டுகளாகக் கொழும்பு விவேகானந்த சபையின் ஆதரவில் வெள்ளவத்தைச் சைவமங்கையர் கழகத்தில் சமய வகுப்புகள் ஆசிரியர் பண்டித சிவங்கருணாலய பாண்டியப் புலவர் தலைமையில் ஒழுங்காக நடைபெற்று வருகின்றன. புதன்கிழமைகளில் மாலை 6 மணிமுதல் 8 மணிவரை பெரியபுராணம் திருக்குறள் வகுப்புகள், ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9 மணிமுதல் 11 மணிவரை சிவஞானபாடியம் திருமந்திர வகுப்புகள். மாணிக்கவாசகர் குருபூசைத் திருநாளாகிய 6-7-43 ல் திருமந்திர வகுப்பு ஆரம்பிக்கபபட்டது. ஷை சபையின் அங்கத்தவர்களையும் அன்பர்களையும் இவ்வகுப்புகளிற் கலந்து கற்றுப் பயனெய்துமாறு விவேகானந்தசபையின் நகர்ப்புறக் காரியதரிசியாகிய திரு. அருள். தியாகராசா அவர்கள் வேண்டுகின்றார்கள்.

திருமந்திரம் சைவசித்தாந்த முதனூலாகவும் பத்தாம் திருமுறையாகவுஞ் சைவர்களாற் போற்றிப் பூசிக்கப்பட்டு வருகின்றது. திருமூலமுனிவர் மூவாயிரம் ஆண்டு தவஞ்செய்து, ஆண்டிற்கு ஒரு செய்யுளாக மூவாயிரஞ் செய்யுளகள், இயற்றியிருக்கிறாரென்பது 'தெய்வ மணக்குஞ் செய்யுள்களை'யுடைய பெரியபுராணததிலிருந்து எமக்குத் தெரிகிறது. பின்வரும் வெணபாவினால் இதன் பெருமை விளங்கும்.

"தேவர் குறளுந் திருநான் மறை முடிவு
மூவர் தமிழும் முனிமொழியுங்கோவை
திருவாசகமுந் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர்"

திருஞான சம்பந்த சுவாமிகள் திருவாவடுதுறைக்குச் சென்றகாலை திருமூலர் திருமந்திரம் கொடிமரத்தின்கீழ் அடக்கஞ் செய்து வைக்கப்பட்டிருந்ததாகவும் கொடிமரத்திற்கருகே அவர் சென்றகாலை தமிழமணம் வீசுவதாக அவர் இயம்பினரென்றும், அப்போது அஃது ஆண்டுக் கண்டெடுக்கப்பட்டதென்றும், திருவாவடுதுறைப் புராணம் கூறும். திருமூலர் வரலாற்றில் 'சேர்ந்திருந்தேன சிவனாவடுதண்டுறை என்பதால் அவர் துறைசையிலிருந்தமை தெளிவு'.

"நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்"
(திருமந்திரம்)

வதுளை சரசுவதி வித்தியாசாலை மலேறியா வாரச் சங்கீத விழா

குறித்த சங்கீத விழா ஷை பாடசாலை மண்டபத்தில ஊவா சுகாதாரப்பகுதித் தலைவர் கனம் A. F. S. பெரீரா (M. O. H.) அவர்கள் தலைமையில் 30-7-43 வெள்ளிக்கிழமை மாலை 7 மணி தொடக்கம் பன்னூற்றுக்கணக்கான சனங்களின மத்தியில அதிவிமரிசையாக நடந்தேறியது. அவ்வமயம் இப்பகுதி வித்தியாதரிசி கனம P. S. வைத்தியலிங்கம் அவர்கள் சிறந்த ஓர் உபந்நியாசமும், ஸ்ரீமதி, ஏகாம பிகை, கார்த்திகேசு, செல்வி கமலா தாமோதரம், செல்வி சரசுவதி, கனகசபாபதி, செல்வி மகேஸ்வரி, சோமசுந்தரம், செல்வி, சுந்தரேசுவரி, ஞானபண்டிதன் ஆகியோர் உருத்திரவீணை, வயலினோடு சிறந்த சங்கீத விருந்தையும் நல்கினர். இன்னும் குறத்தி நடனம் கோலாட்டம், மலேறியாவும் மின்னேரிக கமமும், துள்ளபரசர் மகாநாடு, வதுளை எங்கள்நாடு, நடனம் என்னும் விஷயங்கள் பாடசாலை மாணவ மாணவிகளால் மிகவும் சிறப்பாக நடிக்கப்பட்டன. சபையோர்கள் மிகுந்த ஆனந்தத்தையும் இடைவிடாநகைப்பையும் பெற்று மகிழ்ந்தனர். இறுதியில தலைவர் பாடசாலையையும் ஆசிரியர்களையும் புகழ்ந்து அவர்களின இடைவிடா முயற்சியால இச்சிறந்த சங்கீத விருந்து எல்லோருக்கும் கிடைத்திருக்கிறதென்றும், பாடசாலையில நன்னோக்கம் பற்றிய பல விஷயங்கள் நடந்து வருவதை தாம் கண்ணாரக் காண்பதாகவும் கூறித தமது பேருரையை முடித்தனர்

கடித—

சுந்தரமூர்த்திநாயனார் குருபூசை

நிகழும் சுபானு௵ ஆடி௴ 23ந் திகதி (8-8-43) ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை மாதரவில் ஷை சபை நிலையத்தில் வழமைபோலச் சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை நடைபெறும்.

நிகழ்ச்சிகள்

முற்பகல் 9 தொடக்கம் பிற்பகல் 1 வரை கடவுள் வழிபாடும் நால்வர் பூசையும், பெரியபுராணத்தில் வெள்ளானைச்சருக்கம் படித்துப் பயன் சொல்லுதலும்.

பிற்பகல் 1—2வரை மாகேசுரபூசை

மு. மயில்வாகனம்,
காரியதரிசி.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தற் பிரசாரம்

ரூஸ்வெல்டின்மீது குற்றச்சாட்டு

வாஷிங்டன், ஆக 1

கவர்னர் அல்பிரெட். எம் லாண்டன் ஜனாதிபதி ரூஸ்வெல்டின் நிர்வாகத்தை மிகவும பலமாகக் கண்டித்து றேடியோவிற் பேசும்போது ரூஸ்வெல்டின் நிர்வாகத்தைப் பாஸிஸ்ட் நிர்வாகமென்று குறிப்பிட்டார். எம். லாண்டன் 1936ம வருடத்தில் ஜனாதிபதி தேர்தலில அமெரிக்க குடியரசு அபேக்ஷகராகநின்று தோல்வியடைந்தார்.

எம். லாண்டன் மேலும் கூறியதாவது:- 1933ம் வருட ஆரம்பத்தில் ஜனாதிபதி ரூஸ்வெல்டுக்கு இருந்த ஆதரவைப்போல வேறு எந்த ஜனாதிபதி காலத்திலும் இருந்ததில்லை. 1942ம் வருட இறுதியிலும் அந்த ஆதரவு இருந்தது. இன்று துவேஷமும் பிரிவினையும்தான் மலிந்து கிடக்கின்றன. கட்டுக்கடங்காத நாணயப் பெருக்கம் ஏற்படும்போல் தோன்றுகிறது. திட்டம் போடுபவரின் கொள்கைகளில எங்கோ தவறு இருந்தவண்ணமாகவே இருக்கிறது. காங்கிரஸ் நிறைவேற்றும் சில சட்டங்களுக்கு ஜனாதிபதி அடிபணிய மறுக்கிறார்.

நாட்டிலுள்ள மக்களின் பொறுப்புகளையெல்லாம் பிடுங்கிவிட ரூஸ்வெல்ட்கோஷ்டியார் யுத்தத்திற்குப் பிந்திப் புனருத்தாரணத் திட்டம் போட்டிருக்கின்றனர். இதுதான் பாஸிஸ்டுகள் கூறும் பொருளாதாரத் திட்டமாகும். நாட்டில் இன்னும் தீர்க்கப்படாமல் இருக்கும் வேலையில்லாத் திண்டாட்டம் ஏழ்மைத்தனம் உற்பத்திபோன்ற பிரச்சினைகளைத் தீர்க்க அக்கோஷ்டியார் கூறும் மருந்து அதுதான். கடுமையான தேர்தல்போட்டி ஏற்படுமென்பதற்கான அறிகுறிகள் தென்பட ஆரம்பித்து விட்டன. பாஸிஸ்ட் கோஷ்டியார் மறையவேண்டும். அல்லது அமெரிக்க குடியரசு மறையவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

COMMISSION SALE
விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறையிலுள்ள
யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோட்டில்
1 வல்வெட்டி செல்லையா ஐயாத் துரையும் பெண்
2 வல்வெட்டி சின்னம்மாவும் வழக்காளிகள்

இல. 1409 P.

எதிராக

1. வல்வெட்டித்துறை இளையதம்பி தம்பையாவும் 58 பேர்களும் எதிராளிகள்

மேற்கூறிய இலக்கப் பிரிவிடல் வழக்கில் தீர்ந்த விற்பனவுத் தீர்வைப் படியும் எனக்குக் கோட்டால்அனுப்பப் பட்ட கொமிஷன் அதிகாரப்படியும் 1943-ம் ஆண்டு ஆவணி மாதம் 23-ந் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்குப்பின்னல் விபரிக்கப்படும்ஆதனம் இரண்டு துண்டுகளாகப்பிரிவிடப் பட்டு அந்தந்தத் துண்டுகளில் நின்று முதலாவதாக மதிப்புத்தொகையிலிருந்து பங்காளருக்கிடையிலும் அவர்கள் வாங்கத்தவறினல் உடனே அந்த இடத்திலேயே பிரசித்த ஏலத்திலும் என்னல் விற்கப்படும்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திரிக் வடமராட்சிப்பகுதி உடுப்பிட்டிக் கோயிற்பற்று வல்வெட்டித்துறையிறை கொம்மன்சேவிற் கொள்வில நிருவத் தம்பைக்கு வடக்குத்திடல். இது மேற் கூறிய வழக்கில் அணைக்கப்பட்டிருக் கும் உலாந்தா மேஸ்தர் G. C. கணப திப்பிள்ளை அவர்களின் 6619 ம் இலக் கப்படத்தின்படி நிலப்பரப்பு 11 குளி $8\frac{22}{32}$ எல்லே.கிழக்கு இரத்தினசாமி அரு ளம்பலத்துக்கும் மறுபேருக்குமுடைய வாதனம். வடக்கு கடற்கரை. மேற்கு கந்தசாமி குமாரசாமிக்குடைய வாத னம். தெற்கு வழக்காளிகளுக்கும் மறுபேருக்குமுடைய வாதனம்,

1 மேற்சொல்லிய காணி நிலப்பரப்பு குளி$8\frac{20}{32}$ ல் 1943-ம் ஆண்டு வைகாசி மாதம் 8-ந் திகதி யில் 746.ம் இலக்கத்தில் என் னல் விந்தாரிக்கப்பட்ட படத்தில் மேற் குப்புறமாக A என்று அட்சரமிடப் பட்ட துண்டுக்கு நிலப்பரப்பு 5 குளி 7. எல்லே: கிழக்கு குறித்த படத்தில் B என்று அட்சரமிடப்பட்ட துண்டு. வட க்கு கடற்கரை. மேற்கு கந்தசாமி குமா ரசாமிக்குடைய வாதனம். தெற்கு வழக்காளிக்கும் மறுபேருக்குமுடைய வாதனம். இது முழுவதும். நிலம் தென்னைகள் பனைகளின் மதிப்புத் தொகை ரூபா 1350 ஆயிரத்து மூன் னூற்று ஐம்பது. வீடு கொட்டில்களின் மதிப்புத்தொகை ரூபா 30 முப்பது. ஆகக்கூடிய தொகை ரூபா 1380.

2 மேற்சொல்லிய 746.ம் இலக்கப் படத்தில் B என்று அட்சரமிடப்பட்ட துண்டுக்கு நிலப்பரப்பு 6 குளி $1\frac{20}{32}$. எல்லே: கிழக்கு இரத்தினசாமி அருளம் பலத்துக்கும் மறுபேருக்குமுடையவாத னம். வடக்கு கடற்கரை. மேற்கு குறித்தபடத்தில் A என்று அட்சரமி டப்பட்ட துண்டு. தெற்கு வழக்காளிக் கும் மறுபேருக்குமுடைய வாதனம். இது முழுவதும் நிலம் தென்னைகள் பனைகளின் மதிப்புத்தொகை ரூபா 1525 ஆயிரத்து ஐந்நூற்று இருபத் தைந்து. வீடு கொட்டில்களின் மதிப் புத்தொகை ரூபா 150 நூற்றைம்பது. ஆகக்கூடியதொகை ரூபா 1675.

மா. வேலுப்பிள்ளை,
உலாந்தா மேஸ்தர் & கொம்மிஷனர்.
புலோலி கிழக்கு, பருத்தித்துறை.
10-6-43 (Mis 97—5.8.43)

கரவைமாணிக்கவாசக விதாலயம்

சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூசைத் தினம்; சைவப்பிரசங்கம்

எதிரே வரும் ஞாயிற்றுக்கிழமை (ஆடிச்சோதியன்று) (8-8-43) மாலை 7 மணியளவில், மை பாட சாலைமண்டபத்தில், மை பாடசாலை மாணவர் தேர்ச்சிச்சங்க ஆதரவில் பிரமஸ்ரீ ச. குமாரசுவாமிக்குருக்கள் அவர்களின் தலைமையில், புதநூர் ஸ்ரீ சோமாஸ்கந்த வித்தியாசாலை தலைமையாசிரியர் பண்டிதர் திரு. க. மயில்வாகனம் அவர்களால் "தடுத்தாட் கொண்ட புராணச் சிறப்பு" என்னும் விஷயம்பற்றியும் அண்ணுமலைப் பல்கலைக்கழக வித்து வான் திரு. T. தங்கராஜன் அவர்க ளால் "சுந்தரர் தேவாரம்" என்னும் விஷயம்பற்றியும் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்படும். —கடித

திருச்சி ரேடியோ
(1 இசைத் தட்டு)

வெள்ளி ஆகஸ்ட் 6

காலை 7-45 சோதரம்பம் † 7-50 தமி ழில் செய்திகள் 8 தந்தி இசை † 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 கல்பகம் நாராயணன் பாட்டு 9 ஒலிபரப்பு முடிவு.

1 கதம்பம் † 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 கல்பகம் நாராயணன் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை 5 கண்டதேவி ஸ்ரீ திருவேங் கடம் ஐயங்கார் பாட்டு 5-40 தூான் ஷரீப் விளக்கம் 6 செம்பொன்னர் கோயில் எஸ் ஆர் கோவிந்தசாமிப் பிள்ளை சகோதரர்கள் நாகஸ்வரம் 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 இலக்கிய வாசகம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய் திகள் 7-45 ஜயாவின்தும்பம் 8 கண்ட தேவி எஸ் திருவேங்கடம் ஐயங்கார் பாட்டு 8-30 செம்பொன்னர் கோயில் எஸ் ஆர் கோவிந்தசாமிப் பிள்ளை சகோதரர்கள் நாகஸ்வரம் 9-20 ஆங்கி லத்தில் செய்திகள் 9-30 லண்டனிலி நந்து செய்திகள் 9-45 உலக விவகா ரங்கள் 10 இசைவேளை † 10-30 ஒலிபரப்பு முடிவு.

சனி ஆகஸ்ட் 7

காலை 7-45 சோதாரம்பம் † 7-50 தமி ழில் செய்திகள் 8 திருச்சி வாத்ய கோஷ்டி 8-15 ஆங்கிலத்தில் செய்தி கள் 8-30 எஸ் ராமசுப்பையர் வயலின் 9 ஒலிபரப்பு முடிவு.

1 பாலம் ராமமூர்த்தி பாட்டு 1-30 ஆங் கிலத்தில் செய்திகள் 1-40 சங்காபர ணம் † 2 தமிழில் செய்திகள் 2-05 எஸ் ராமசுப்பையர் வயலின் 2.30 முடிவு.

மாலை 5 பாலம் ராமமூர்த்தி பாட்டு 5-40 திருவாய்மொழிவிளக்கம் 6 தீரைக் கதம்பம் † 6-30 ஆங்கிலத்தில் செய்தி கள் 6.40 கிராம நிகழ்ச்சிகள் 7 15 ஒரு தூடையும் எண்தீசையும் 7-30 அறி விப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 மதாஸிலுள்ளபடி எம் எஸ் சுப் புலக்ஷ்மி பாட்டு 9-15 அப்துல்கரீம் கான் † 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 ஸிதார், ஜலதாங்கம் 10 இசை வேளை † 10-30 ஒலிபரப்பு முடிவு.

ஞாயிறு ஆகஸ்ட் 8

காலை 7-45 சோதாரம்பம் † 7-50 தமி ழில் செய்திகள் 8 திருவேண்காடு சுப்ர மண்யபிள்ளை நாகஸ்வரம் † 8-15 ஆங் லத்தில் செய்திகள் 8-30 நாகர்கோயில் கே மகாதேவன் பாட்டு 9 முடிவு.

12 கதம்பம் † 12-30 ஒலிமலர் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 ஸி ஏ நாராயணன் பாட்டு 2 தமிழில் செய்தி கள் 2-05 இசைக் கதம்பம் † 2-30 ஒலி பரப்பு முடிவு.

மாலை 5 ஸி ஏ நாராயணன் பாட்டு 5-40 தேவாராதனை 6 என் எஸ் தங்கம் வீணை பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய் திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 பக்க பலங்கள் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 எங்கள் தபாற்பெட்டி 8 நாகர்கோயில் கே மகா தேவன் பாட்டு 8-30 என் எஸ் தங்கம் வீணை பாட்டு 9 சர்வகலாசாலைகளுக்கு 9-15 ஐரோப்பிய சங்கீதம் † 9-20 ஆங் கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலி நந்து செய்திகள் 9-45 புல்லாங்குழல் வீணை 10 இசைவேளை † 10-30 ஒலிபரப்பு முடிவு.

திங்கள் ஆகஸ்ட் 9

காலை 7-45 சோதாரம்பம் 7-50 தமிழில் செய்திகள் 8 திருச்சி வாத்ய கோஷ்டி 8 15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 பூவாளூர் சுப்பையாபிள்ளை நாகஸ்வரம் 9 ஒலிபரப்பு முடிவு.

1 கதம்பம் † 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 எம் கே கோபால பாகவதர் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை 5 பூவாளூர் சுப்பையாபிள்ளை நாகஸ்வரம் 5-45 இசைப் பயிற்சி 6 எம் கே கோபால பாகவதர் பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 செய்திச் சித்திரம் 7-30அறிவிப்புகள் 7-35 தமிழில் செய் திகள் 7-45 இருதாலிசை † 8 கே எஸ் வெங்கடராம ஐயர் வயலின் 9 20 ஆங் கிலத்தில் செய்திகள் 9-30 லண்டன் லிருந்து செய்திகள் 9 45 இருபுலனிக் குழல்கள் 10 கதம்பம்† 10-30 முடிவு.

பருத்தித்துறைப்பகுதி சுகாதாரவரக் கொண்டாட்டமும் உணவுப்போருட் காட்சியும்

4-ம் பக்கத் தொடர்ச்சி

வரப்பிள்ளை அவர்கள், வடபெரும் பகுதி வித்தியாதரிசி திரு V. K. ரதன் அவர்கள் தமது பாரியார் அவர்களோடு இச்சங்கித விழாவுக் குச் சமுகமளித்தது அக்கிராசனம் வகித்துச் சபையைச் சிறப்பித்தற் காகவும், மற்றும் பல பெரியோர் கள் இக்காட்சி செவ்வனே நடை பெறவேண்டுமென்றெண்ணி அரிய பல தொண்டுகள் ஆற்றியதற்காக வும் பருத்தித்துறைச் சுகாதாரவரா சங்கத்தார் பேரில் நன்றி கூறி இரண் டாம்நாட்காண்டாட்டம் முடி வெய்தியது.

24-ந் தேதி சனிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் பருத்தித்து றைப்பகுதி D. R. O. திரு. A. பெருமையினர் அவர்கள் தலைமை யின்கீழ் விளையாட்டுப் போட்டி ஆரம்பமாயது.

A. R P. உத்தியோகஸ்தர்க ளும் பாடசாலை மாணவர்கள் மாண வர்களும் பங்குபற்றினர். நூற்றுக் கணக்கானோர் போட்டியைப பார்க் கச் சமுகமளித்தனர். பி. ப. 6-30 மணியளவில போட்டியில் வெற்றி பெற்றோருக்கும் காட்சியில் நிற மைகாட்டியவர்களுக்கும் பருத்தித் துறைப் பதில நீதிபதி திரு. V. T. பண்டித குணவர்டினி அவர்களால் பரிசில்கள வழங்கப் பட்டன. பருத்தித்துறைப்பகுதி D. R. O திரு. A. பெருமையினர் அவர்களின் சொற்பொழிவின் பின் காரியதரிசி திரு. P. நடேசன் அவர்களது நன்றி கூறுதலோடு காட்சி முடிவெய்தியது.

கடந்த சில வருடங்களாக வித் தியாபகுதியாரும சுகாதாரப் பகுதி யாரும ஒருங்கு சேர்த்து நம்நாட் டுக்கு இத்தகைய நல்ல தொண்டு கள செய்துவருகின்றனர் எனபது நாம் ஒவ்வொருவரும் அறிந்த விஷ யமாகும. பருத்தித்துறைப்பகுதி யில் இவ்வித சேவைகள் மிகவும மெச்சப்படத்தக்க முறையில நடை பெறுவதற்கு இப்பகுதிச் சுகாதா ரவரிசோதகர் திரு. P. நடேசன் அவர்களது விடாமுயற்சியும், பாட சாலைகளினதும் வித்தியாதரிசிகளி னதும் ஒத்துழைப்பும், இப்பகுதி D R. O. திரு. A பெருமையி னர் அவர்களது குன்றாத ஊக்க முமே காரணமாகும். இத்தகைய அரிய சேவைசெய்யும் ஒவ்வொருவ ரும் நீடூழிவாழ எல்லாம் வல்ல இறைவன் அருள்பாலிப்பானாக.

—கடித

பல் வைத்தியம்
யாழ்ப்பாணம்

பல் வைத்தியம் செய்யவும் கண் பரி சோதனை செய்யவும் தத்துவம்பெற்றவ ரான திரு. எஸ். சார்ல்ஸ் பத்திரஞ அவர்கள் வருஷத்தின் எல்லா மாசங்க ளிலும் 3-ந் திகதி தொடக்கம் 15-ந் திகதிவரையும் யாழ்ப்பாணம், பெரிய தெரு 43ம் இலக்கத்திலுள்ள வைத்திய சாலையில் கருமம் நடாத்துவார்.

குருநாகல் கிளை ஸ்தாபனம்

மாசத்தின் 20ந் திகதியிலிருந்து 30-ந் திகதி வரையும் குருநாகல் கோட்டுவீட் டுக்கு முன்னுள்ள பல்வைத்திய கிளை ஸ்தாபனத்தில் கருமம் நடாத்துவார்.

யாழ்ப்பாணத்தில் அவரிடம் வைத்தி யம் செய்விப்போர் முன் ஒழுங்குகள் செய்யவேண்டில் அவருடைய குருநா கல் விலாசத்துக்கு எழுதுதல் நல்லது.

(Mis. 98. 5.8—31.12.43)

ஏல விற்பனவு
யாழ்ப்பாணம் டிஸ்திரிக்கோடு

கடன்வழக்கு இலக்கம் 196 & 197.

யாழ்ப்பாணம் கொட்டடி M. C. தண் டாயுதபாணி, M. C. சந்திரசேகரம் கடன்பட்டவர்கள்.

யாழ்ப்பாணம் டிஸ்திரிக் நீதிதலத் தில் பிறப்பித்த கட்டளையின்படி கீழே காட்டப்பட்டுள்ள சாமான்கள் 1943ம் ஆண்டு ஆவணிமாசம் 14-ந்திகதி சனிக் கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் 1-ம் குறுக்குத்தெருவில் 18-ம் இலக்கத்தி லுள்ள எனது கந்தோரில் பிரசித்தஏலத் தில் விற்கப்படும்.

சாமான்களின் விபரம்

Iron Safes 4 இரும்புப்பணப்பெட்டி 4
Almayrahs 3 அலமாரிகள் 3 (கண்ணடிபதித்தது 1)
Clocks 2 மணிக்கூடு 2
Peddakams 2 பெட்டகம் 2
Radio Set. 1 ரேடியோ செற் 1
Writing Table 1 எழுத்துமேசை 1
Counter Table 1 காசு எண்ணுகிற பெரியமேசை 1

M. K. சங்கரப்பிள்ளை,
ஒப்படைகாரன்.

1-ம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம், 3.8.43.

(Mis. 99. 5 & 9-8-43)

சிறுபிள்ளை வைத்தியத்திலும் ஏனைய வைத்தியங்களிலும் சித்திபெற்ற

சில்லாலை முத்துவைத்தியசாலை

சாதாரணமாகச் சிறுவர்களுக்கு வரும் கிரந்தி, சல தோஷம், வயிற்றோட்டம், காய்ச்சல் முதலிய நோய்க ளைத் தணிக்கும் ஒப்புயர்வற்ற அரிய பெரிய மருந்துகளும் கெடுகோட்பட்ட இரும்பு மேகம் கிரந்தி வாதங்களை அகற்றும் அனுபவம் வாய்ந்த சிறந்த மருந்துகளும், எண்ணெய்வகைகளும் எம்மிடம் ஏராளமா யுண்டு. எழுகளையும் தனவந்தர்களையும் ஓரேசிராய நடத்தும் அரசினரின் அங்கிகாரம் பெற்ற சில்லாலை முத்து வைத்தியர்.

அ. செபஸ்தியாம்பிள்ளை. பெரியதெரு, நம். 160, மேல்வீடு, யாழ்ப்பாணம்.
(Q. 30. 11-5.43—10-8.43)

குறைந்த விலையில் துணிகள் ஷேட்துணிகள், துவாய்கள் பஞ்சாலும் பட்டாலும் ஆகிய சேலைகள் முதலியவை.

R. S. M. டெக்ஸ்டைல் ஸ்ரோர்ஸ்

மொத்தத்துக்கும் சில்லறைக்கும் விற்கும் வியாபாரிகள்

பெரியகடை—யாழ்ப்பாணம். K. A. இரத்தினசிங்கம், பங்காளர்.

Y 19. 4-3-42——3-3-44

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Thursday 5, August, 1943.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org